**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 182/2021**
**நாள் 14/11/2025 வெள்ளிக்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – வசந்த குமார் (DW1) | த/பெயர் – சண்முகம் |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. இவ்வழக்கின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் உாிமையாளர் முனுசாமி என்றால் சரிதான். ஆனால் நாங்கள் தான் அனுபவத்தில் உள்ளோம். நான் தாக்கல் செய்துள்ள பி.சா ஆ 1 பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் முனுசாமி பெயரில் உள்ளது. சாந்தி என்பவர் தான் மேற்படி வழக்கை தாக்கல் செய்தள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி டில்லியம்மாள் என்பவர் எனது தாயார் என்றும், 2ம் பிரதிவாதி சங்கீதா என் அக்கா என்று சொன்னால் சரிதான். அவர்கள் இருவருக்காகவும் சேர்ந்து தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் பெருங்காவூர் கிராமத்தில் உள்ளது. அதன் சர்வே எண் 255/1A5 ஆகும். வழக்கு சொத்தின் பரப்பளவு 5886 சதுர அடி ஆகும்.

2. வழக்கு சொத்தின் உரிமையாளர் முனுசாமி 2006ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். முனுசாமி என்பவரின் மனைவி பெயர் அமாவாசை என்றால் சரிதான். செல்வி, சித்ரா, அஞ்சுகம் ஆகியோர்கள் மேற்படி முனுசாமி மற்றும் அமாவாசையின் வாரீசுகள் என்றால் சரிதான்.

வாதி சாந்தி என்பவர் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் நாங்கள் இருக்கும் இடத்தில் இருக்கும் எங்களது வீட்டை இடித்துவிட்டு வழக்கு சொத்தை சுவாதீனம் கேட்டு தாக்கல் செய்துள்ளார். முனுசாமியின் வாரீசுகள் வழக்கு சொத்தை பொருத்து வாதி பெயரில் ஏற்படுத்திக்கொடுத்துள்ள விடுதலை பத்திரத்தை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விடுதலை பத்திரம் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அதன் விவரங்கள் பற்றி என் வழக்கறிஞர் கூறவில்லையா என்றால் கூறவில்லை.

3. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா ஆ 1 விடுதலைபத்திரம் வாதி பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் வா.சா ஆ 13 வில்லங்க சான்றிதழிலும் மேற்படி விடுதலைபத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது பற்றிய குறிப்பு உள்ளது என்றால் சரிதான். 2018 ல் தான் மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்டதாக தெரிகிறது. அதற்கு முன்னர் நாங்கள் வில்லங்கம் போட்டு பார்த்ததில் எந்த வில்லங்கமும் இருக்கவில்லை. முனுசாமி பெயரில் இருந்த பட்டாவின் அடிப்படையில் தான் அவருடைய வாரீசுகள் வாதி பெயரில் விடுதலை பத்திரம் ஏற்படுத்தியுள்ளனர் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

4. என் அப்பா உயிருடன் இருந்த போது வழக்கு சொத்தில் வாடகைக்கு தான் வந்தார் என்றால் சரியல்ல. அதே போல் முனுசாமி மற்றும் வாரீசுகளின் அனுமதியுடன் தான் வழக்கு சொத்தில் வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் தமிழ்நாடு அரசின் தொகுப்பு வீடுகள் திட்டத்தின் கீழ் எங்களுக்கு வீடு

ஒதுக்கப்பட்டு இருந்தது என சொல்லியுள்ளேன் என்றும் ஆனால் அதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் அவ்வாறு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான்.

5. நான் தாக்கல் செய்துள்ள பி.சா ஆ 14 அனுபவ சான்றிதழில் பட்டா எண் மற்றும் பரப்பளவு குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். சர்வே எண் குறிப்பிடபட்டுள்ளது. மேற்படி அனுபவ சான்று யார் வழங்கியது என்றால் கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்டுள்ளது. கிராம நிர்வாக அலுவலர் அனுபவ சான்று வழங்க தகுதியற்றவர் என்றும் வட்டாச்சியர் தான் வழங்க தகுதியானவர் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த ஆவணம் வழக்கிற்காக போலியாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆதார் அட்டை, குடும்ப அட்டை ஆகியவை சொத்தின் அனுபவத்தை காட்டுவதற்கான ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. வீட்டுவரி ரசீது, போலிசாருக்கு கொடுக்கப்பட்டுள்ள புகார் ஆகிய ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் என்றால் சரியல்ல.

6. வாதி சாந்தி மற்றும் அவரது குடும்பத்தார் 50 ஆண்டுகளுக்கு மேலாக வழக்கு சொத்தில் அனுபவத்தில் உள்ளனர் என்றால் சரியல்ல. 2001ம் வருடம் வழக்கு சொத்தில் குடியேறியதாக கூறுகிறோம் என்றும் அப்போது எனக்கு சிறு வயது என்பதால் வழக்கு சொத்தின் முழு விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி காலகட்டத்திலும் வழக்கு சொத்திற்கான பட்டா முனுசாமி பெயரில் தான் இருந்தது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 2001ம் ஆண்டு என் தந்தை வழக்கு சொத்தில்

குடியேறியபோதும் முனுசாமி பெயரில் தான் பட்டா இருந்ததாக கூறியுள்ளேன் என்றும் தற்போது தெரியாது என கூறுகிறேன் என்றும் இரண்டில் எது உண்மை என்றால் பட்டா முனுசாமி பெயரில் இருந்தது என்பது உண்மையாகும்.

7. என் பெயரிலோ மற்ற பிரதிவாதிகள் பெயரிலோ எந்த வருவாய் ஆவணங்களும் இல்லை என்றால் சரியல்ல, வீட்டுவரி ரசீது உள்ளது. எங்கள் பெயரில் பட்டா மாற்றம் எதுவும் செய்துள்ளோமா என்றால் இல்லை. வழக்கு சொத்தை பொருத்து பத்திரம் ஏதாவது ஏற்படுத்தியுள்ளோமா என்றால் இல்லை. வாதி மற்றும் அவர் குடும்பத்தார் தொடா்ந்து வழக்கு சொத்தின் அனுபவத்தில் இருந்துவருகின்றனர் என்றும், அவர்கள் பெயரில் பட்டா மற்றும் வேறு ஆவணங்கள் உள்ளது என்றும் வாதியின் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு போலி ஆவணங்கள் தாக்கல் செய்து வழக்கு நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல. அதனால் வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**